

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதி துணைச் செயலாளர் புல்லட் கி.ரமேஷ் மகன் ஆர்.ரஞ்சித் – டி. கீர்த்திகா ஆகியோரின் திருமண வரவேற்பு சென்னை அண்ணா திருமண மாளிகையில் நடைபெற்ற விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு எம்.எல்.ஏ. தன்னுடைய மனைவியுடன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி, பகுதி செயலாளர்கள் செ.தமிழ் வேந்தன், எம். சாமி கண்ணு, சரிதா மகேஷ் குமார், புனிதவதி எத்திராஜன், தில்லை கதிரவன், பெரம்பூர் ராஜன் , பா ஜலபூஷணம், சிவக்குமார், பரிமளா சுரேஷ் பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம் ஏ டீக்கா, எஸ் புஷ்பராஜ், ஜி கிருஷ்ணகுமார், மு.சரவணன், ரமணி லோகேஷ், தமிழ் செல்வி சசிகுமார், துரை பிரகாசம், ஜெ. அண்ணாதுரை, ஸ்வீட் பாபு,வி பாலாஜி, ந.சங்கர்,வி.ஜெகன், எம் துரைசாமி,ரெட் லிங்கேசன், வி. வினோத் ஜமுனா குணசேகரன் சோ. இராமமூர்த்தி எஸ் பாபு ரவிக்குமார் மற்றும் கழக உடன்பிறப்புகள் முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 156வது வட்டம் அ.தி.மு.க.வை சேர்ந்த ஆர்.கிருஷ்ணன் வி.செல்வராஜ், எஸ்.லட்சுமி ஆகியோர் முன்னாள் அமைச்சர், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். மாமன்ற உறுப்பினர் ஜெ.செல்வேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

நாக்பூர் மாணவருக்கு அபுதாபியில் 'நீட்' தேர்வு மையம் ஒதுக்கீடு!

மறுதேர்விலும் நீடிக்கும் குளறுபடிகள்!

நாக்பூர், ஜூன்.21-

இன்று நடைபெறவுள்ள நீட் இளநிலை மறுதேர்வுக்கு நாக்பூரைச் சேர்ந்த மாணவருக்கு அபுதாபியில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த மே 3ம் தேதி நடத்தப்பட்ட நீட் நுழைவுத்தேர்வு, வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகள் காரணமாக ரத்து செய்யப்பட்டது. இதற்கான மறுதேர்வு நாளை நடத்தப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. தேர்வின் போது மாணவர்கள் பின்பற்ற வேண்டிய கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள் உள்ளிட்டவற்றை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது. தேர்வுக்கான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நீட் தேர்வு இன்று நடைபெறும் நிலையில், நாடு முழுவதும் இதற்கான ஒத்திகை நடத்துகிறது. இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள நீட் இளநிலை மறுதேர்வுக்கு நாக்பூரைச் சேர்ந்த அப்துல்லா முகமது தாலிப் என்ற மாணவருக்கு அபுதாபியில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர் புகார் அளித்ததை தொடர்ந்து, மகாராஷ்டிராவிற்குள் தேர்வு மையம் ஒதுக்குவதாக தேர்வு முகமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குளறுபடிகளால் ரத்து செய்யப்பட்ட நீட் தேர்வுக்கான மறுதேர்விலும் பல்வேறு முறைகேடுகளில் குளறுபடிகளும் தொடர்வதன் அறிகுறியே இது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

திருவள்ளூர் மத்திய மாவட்ட

தி.மு.க. மாணவர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர், ஜூன் 21:

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாணவர் அணியின் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (21.06.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு ஆவடி ரயில் நிலையம் அருகிலுள்ள மாவட்டக் கழக அலுவலகம் (War Room) வளாகத்தில் நடைபெறுகிறது.

மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் கழக ஆதிதிராவிடர் நலக்குழு அணிச் செயலாளருமான ஆ. கிருஷ்ணசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு இணைச் செயலாளர் சி. ஜெயசீலன், ப.ச. கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே. பிரேம் ஆனந்த், தங்கம் முரளி, டி. முரளி கிருஷ்ணன், தி.வே. முனுசாமி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்கள் கூட்டம் முன்னதாக. மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வே. தியாகராஜன் வரவேற்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில், பி.எம். ஸ்ரீ திட்டம், சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படும் மும்மொழிக் கொள்கை, உயர்கல்வியை மையப்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்படுவதாகக் கூறப்படும் VBAS மசோதா உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விரிவான ஆலோசனை நடைபெற உள்ளது. தமிழகத்தின் கல்வி உரிமை, மொழி உரிமை மற்றும் மாநில உரிமைகளை பாதிக்கும் எனக் கருதப்படும் இத்திட்டங்களுக்கு எதிராக மாணவர் அணியின் அடுத்தகட்ட ஜனநாயகப் போராட்டங்கள் குறித்தும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளன.

மேலும், மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற 23.06.2026 அன்று நடைபெறவுள்ள ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தில், திருவள்ளூர் மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்கும் வகையில் விரிவான செயல் திட்டமும் இறுதி செய்யப்பட உள்ளது.

எனவே, திருவள்ளூர் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு ஆலோசனைக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என்று திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜெரால்டு, மாவட்டக் கழக நிர்வாகிகள் வி.ஜெ. சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா. நரேஷ் குமார், த. எத்திராஜ், ஜி. விமல் வர்ஷன், எம். முத்தமிழ்ச் செல்வன், வி. குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ். சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேலும், மாநகர, ஒன்றிய, நகர மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள் சன். பிரகாஷ், ஜி. ராஜேந்திரன், பேபி சேகர், ஜி. நாராயண பிரசாத், பொன். விஜயன், டி. தேசிங்கு, என்.இ.கே. மூர்த்தி, தி.வை. இரவி, ஆர்.

திறந்தவெளி நெல் சேமிப்புக் கிடங்கில்

மழையில் நனைந்து ஒன்றரை லட்சம் நெல் மூட்டைகள் - சேதம்!

விவசாயிகள் வேதனை! அதிகாரிகள் அலட்சியம்!

தஞ்சை, ஜூன் 21-

கும்பகோணம் அருகே திறந்தவெளி நெல் சேமிப்புக் கிடங்கில் ஒன்றரை லட்சம் நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகி கிடப்பதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தஞ்சாவூர், கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரத்தில் திறந்த வெளி சேமிப்பு கிடங்கு உள்ளது. கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகளிடம் பெறப்பட்ட நெல் மூட்டைகள், பட்டீஸ்வரம் சேமிப்பு கிடங்கில் அடுக்கி வைக்கப்படுகின்றன.

இந்த கிடங்கில் 30 ஆயிரம் மெட்ரிக் டன் வரை நெல் மூட்டைகள் சேமித்து வைக்கக்கூடிய வகையில் உள்ளன. தற்போது இந்த சேமிப்பு கிடங்கில் 25 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும் தார்ப்பாய் பற்றாக்குறையால் பெரும்பாலான நெல் மூட்டைகள் மூடி வைக்கப்படாமல் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்து வருகின்றன.

இந்நிலையில், கும்பகோணம் பகுதிகளில் நேற்று இரவு பெய்த மழை காரணமாக பட்டீஸ்வரம் திறந்த வெளி நெல் சேமிப்புக் கிடங்கில் இருந்த நெல் மூட்டைகள் நனைந்து வீணாகியுள்ளன. மாவட்ட நிர்வாகத்தின் அலட்சியத்தால் நெல் மூட்டைகள் சேதமடைந்திருப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வட்டச் செயலாளர் தி.சார்லஸ் ஏற்பாட்டில் – முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

மதுரவாயல் 153 வது வட்ட தி.மு.க. சார்பில் 1000 நபர்களுக்கு வேட்டி - சேலை!

பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி வழங்குகிறார்!

சென்னை, ஜூன். 21 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 153 வது வட்ட தி.மு.க. சார்பில் 1000 நபர்களுக்கு வேட்டி சேலை வழங்கும் விழா இன்று (21.06.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணி அளவில், போரூர் ஆர்.ஈ.நகர் 6 வது தெருவில் சிறப்பாக நடைபெற உள்ளது.

153 வது வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர், மதுரவாயல் தொகுதி முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி பங்கேற்று கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டக் கழக அவைத் தலைவர் க. நடராஜன் நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கின்றார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாச்சலம், மாமன்ற உறுப்பினர் சாந்தி ராமலிங்கம், இரா.பால் பாண்டியன், ராமலிங்கம், வட்டக் கழக நிர்வாகிகள் முரளி கிருஷ்ணன், பால் ரவி, பொன்ராமசாமி, விஜயா, ஸ்டான்லி, முகமது இஸ்மாயில், ஏழுமலை, செல்லமுத்து, குமார், தீனா (எ) தினேஷ், பூ.மோகன், ஆர்.டி.பாஸ்கரன், சூரிய பிரகாஷ், மணிகண்டன், காளீஸ்வரி, பாலாஜி, (ஐ.டி.) ந.கந்தன், மாறன், த.சுகுமார், மு.சந்தோஷ்குமார், செல்வராஜ், குமார், ராகவன், ரவி,பாஸ்டின், மார்க் கபந்து, எ.ரவி, கிளாரா, காசி, அருள், தூயவன், லோகேஷ், குமார், பார்த்திபன், சசிகுமார், மாதவன், ஜானகிராமன், தினேஷ், ராஜேந்திரன், வடிவேலு, பிரகாசம், பிரதீப், ரவி, சுரேன், சரவணபாணி, ராஜேந்திரன், பி.கே.கிருஷ்ணன், நவீன், ஜெரோம், பன்னீர், மகேஷ் ஜ.டி.சரவணன், ஜ.டி.குமார், காளி தாஸ், சூர்யா, சுரேஷ்ராஜ், அரவிந்தன், ரகு, கண்ணன், ஐயப்பன், வேலு, லோகு, சரவணன், சரத், கார்த்திக், பூங்கொடி, ஜான்சி, திலகா,கற்பகம், மேரி, சதீஷ்.மற்றும் இளைஞர் அணியைச் சார்ந்த உதயகுமார், நரேஷ், பி.கே.மஞ்சித், கோபி, செபாஸ்டின், மைக்கேல், விக்ராந்த், குமார், சியாம், சஞ்சய், ராஜமன்னார், தாமஸ், லோகநாதன், கௌரிசங்கர் மற்றும் பல்வேறு அணிகளின் வட்ட, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயற்குழு பாக முகவர்கள், இளைஞரணி கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பஷீர் நன்றி தெரிவிக்கின்றார்.

வட்டச் செயலாளர் டி.எம்.ஜோசப் தலைமை! பகுதி செயலாளர் த.ஜெயகுமார் வரவேற்புரை!

பம்மல் வடக்கு பகுதி 31வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன்.21-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி 31வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம், வட்ட செயலாளர் டி.எம்.ஜோசப் தலைமையில் நடைபெற்றது.

வட்ட துணை செயலாளர் தி.ச.நடராஜன், தாம்பரம் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் ஆர். முரளிதரன், வட்ட துணை செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் மா.விஜய குமார் வட்ட பிரதிநிதிகள், ஆர்.ஸ்ரீதர், என்.முருகானந்தம், பி.கல்யாணகுமார், எம்.செல்வம், கே.சீனிவாசன் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ். லாசர், எச்.கே..வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பம்மல் வடக்குப் பகுதிச் செயலாளர் த. ஜெயகுமார் வரவேற்புரையாற்றினார்.

தாம்பரம் மாநகர அவை தலைவர் - தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இதில், பகுதி அவை தலைவர் கே,.சந்திரன், பகுதி துணை செயலாளர் மு. ஸ்ரீதர், மாநகரப் பிரதிநிதிகள் இரா.குமரேசன், இரா.பாபுஜி, பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு, ஆர்.சசிகுமார், எம். ராஜன், எஸ்.ரங்கநாதன் என்.வீராசாமி வி.ராமசாமி எம்.ஏ.பெருமாள், வி. அருள்மொழி, ஏ.ஜெயந்தி, J.மாலதி, சியாமளா, ஆர். யுவராஜ், டி.எஸ்.ரமேஷ், என்.யுவராஜ், ஆர்.நாகராஜ் ஜெ.சி.ராஜா, இ.மணிகண்டன், இ.முகமது அப்துல்லா, வி.முத்து, டி.வி.ரஜினிரவி, எம்..வெங்கடேஷ், என்.பிரேம்குமார், எம். வசந்த், எஸ்.பிர்லாஸ், பி. எம்.சண்முகம், எம்.விஷ்ணு பிரியன், ஏ.தேவராஜ், எஸ். பாலாஜி, எஸ்.காமராஜ், எஸ்.சஞ்சய், பி.துரை ராஜ், எம்.கோபி, எம்.பாலகிருஷ்ணன், எம்.சுகுமார், ஜெ. ஜெயசீலன், சி.கபிலன், ஜெ.ருக்மணி, ஜெ.ஞானமணி, ஜி.நந்தினி, ஜெ.மாரியம்மாள், கே.சுமித்ரா, ஜி.சித்ரா, வி.அஞ்சலிதேவி ஆர்.அலமேலு, எம்.குமுதா, அமுதா, சரோஜா, என். பொன்னம்மாள், முனியம்மாள், ஆர்.வாசுகி, சுந்தரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில், வட்ட இளைஞரணி அமைப்பாளர் கௌதம் விஜயகுமார் நன்றி கூறினார்.

தலைமை சி.ரமேஷ்! முன்னிலை நந்தனம் கி.மதி – சீ.கிருஷ்ணமூர்த்தி!

121 'அ' வட்டத்தில் கலைஞர் பிறந்தநாள் - 1003 பேருக்கு உதவிகள் - அறுசுவை உணவு!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு வழங்குகிறார்!

சென்னை, ஜூன் 21-

நமது நெஞ்சமெல்லாம் வாழும், பகுத்தறிவு பகலன் தந்தை பெரியாரின் தம்பி, பேரறிஞர் அண்ணாவின் தம்பி, கழகத்தை 50 ஆண்டுகளுக்கு மேலாக கட்டிக் காத்த, நவீன தமிழகத்தை கட்டியெழுப்பிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், 103 பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121அ வட்ட திமு கழகத்தின் சார்பில், இன்று (21.6.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணி அளவில், பி எம் தர்கா இஸ்மாயில் கிரவுண்ட், வி பி ராமன் தெருவில், வட்ட பொருளாளர் சி.ரமேஷ் தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி எம்.சி., வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில், வட்ட பொருளார் சி,ரமேஷ், வட்ட துணை செயலாளர் பீ இளவரசு, பகுதி பிரதிநிதி கோ முருகன் ஆகியோர் ஏற்பாடு செய்து இருக்கும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு அவர்கள், கழக கொடி ஏற்றி 1003 பொதுமக்களுக்கு இனிப்பு களையும், நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவுகளை வழங்குகிறார்.

121 அ வட்ட திமு கழகத்தின் சார்பில், வட்ட பொருளாளர் சி ரமேஷ் , வட்ட துணை செயலாளர் பி இளவரசு, பகுதி பிரதிநிதி கோ முருகன் ஆகியோர் ஏற்பாடு செய்து இருக்கும் இந்நிகழ்ச்சியில், மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், 121 அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2 / BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

எஸ்.ஜீவரத்தினம் தலைமை! சுற்றுச்சுழல் அணி – முத்தமிழ் அறிஞர் கலைஞர் நற்பணி மன்றம் சார்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள்!

மயிலை த.வேலு – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்குகின்றனர்! எஸ்.முரளி முன்னிலை!

சென்னை, ஜூன் 21-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி சுற்றுசுழல் அணி தி.மு.க மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நற்பணி மன்றம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் சுற்றுசூழல் அணி எஸ். ஜீவரத்தினம் தலைமையில் இன்று (21.06.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணி அளவில், 2வது மெயின் ரோடு, வெள்ளீஸ் வரர் தோட்டம், ஆர்.ஏ.புரம். சென்னை-28 என்ற முகவரி யில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, சென்னை தென்மேற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இதில் பகுதி செயலாளர் எஸ்.முரளி, 171வது வட்ட செயலாளர் துரைபார்த்திபன், 171வது மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி, 124 (அ) வது வட்ட பொருப்பாளர் மா.பா.அன்பு, மன்ற பொருளாளர் த.வேல்முருகன், மன்ற செயளாளர் சந்தோஷ்குமார் ரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட அமைப்பாளர் சுற்றுகழல் அணி என்.எஸ். பாலசுப்பிரமணியன், ம. மாரிச்சாமி, செந்தில்குமார், அய்யாவு, உதுரைக் கண்ணு, டி.எஸ்.விஷ்ணு சங்கர், பி.சார்லி, Wefas க. பத்மநாபன், கோ.வெங்கட் ராமனன், லயன் பி.சக்தி வேல், ஜி.ஹரி நாராயணன், மு.வேல் ராஜன், கே.எல்.சிவானந்தம், உ. யுவராஜ், வரவேற்கின்றனர்.

மயிலை வேலு சம்மந்தம், மயிலை ஆர்.பாலு, எஸ்.சரவணன், ஆர்.கதிரவன், சி.கணேஷ்பாண்டியன், சுசீலாதுரைராஜ், ஹார்டுவோர்ஸ், எஸ். குமார், தென்றல் விஜய், மா.பா.தாமு, பி.எல்.தாஸ், டி.ரமேஷ், எம்.கே.பி.மணிமாறன், அருண்ராமஜெயம், எஸ்.வெங்கடேசன்,

மயிலை பகுதி வட்ட செயலாளர்கள் ஏ.தாஸ், அ. தவனேசன், வி.வெற்றி வேல், கோ.கண்ணன், பா. பொன்னுசாமி, டி.ராஜ வேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ. ஏழுமலை, மூ.இராஜேந்திரன், மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வே. கார்த்திக், டி.ஜெகதீஷ்பாபு, எம்.பிரவீன்பாபு, ஏ.ஜான் பிரிட்டோ, எல். ராணி, சுந்தர், ரகு, மா.டில்லி, M.S.T. மணிமாறன், எஸ்.சாந்தி, ஆர்.மணிகண்டன், ஏ.சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பகுதி துணை அமைப்பாளர்கள் சுற்றுசூழல் அணி: ஆர்.கே.முருகன், இ.தணிகாசலம், எஸ்.பிரசாந்த், தமின் பெனிக்ஸ், மகிமை லூர்துசாமி, மணி கண்டன், சந்துரு, அப்துல் லத்திப் சுகுமார் நன்றி கூறுகின்றனர்.

இராயபுரம் கிழக்குப் பகுதி 51 அ வட்டக் கழகச் செயலாளர்

பெ.கண்ணன் தாயார் திருமதி பெ. சாந்தா மறைவு!

தா.இளைய அருணா – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூன் 21-

சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி 51 அ வட்ட கழக செயலாளர் பெ.கண்ணன் தாயார் திருமதி பெ. சாந்தா அவர்கள் இயற்கை எய்தினார்.

சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி 51 அ வட்ட கழக செயலாளர் பெ.கண்ணன் தாயார் திருமதி பெ. சாந்தா அவர்கள் இயற்கை எய்தினார்கள்.

அம்மையாருடைய திருவுடலுக்கு தலைமை செயற்குழு உறுப்பினர் தா.இளையஅருணா அஞ்சலி செலுத்தினார்.

பொதுக்குழு உறுப்பினர் நா.சண்முகம் ஆர்.வி. கணேஷ், மாவட்ட அணி அமைப்பாளர் கார்த்திக் செங்குட்டவன், ஜே. காணிக்கைநாதன், க.கோவிந்தசாமி, எஸ்.குமரன், எம்.எம். சுஜா வுதீன், வட்டக் கழக நிர்வாகிகள் ஆ.ரமேஷ், புக்ஸ்டால் கண்ணன், செல்வம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அன்னாரது உடல் நல்லடக்கம் இன்று (21.06.2026) காலை 10 மணி அளவில் மூலக்கொத்தளம் மயானத்தில் செய்யப்படுகிறது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.